4. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2011 ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் கணக்குக் குழுவினுடைய 223 முதல் 227 வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 20 நிமிடங்கள்.

முற்பகல் 11-20

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தின்மீது, உரையாற்றுகின்ற நல்லதொரு வாய்ப்பைத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் தளபதி அவர்களுக்கும் முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சூரியனைக் கண்டால் பனி விலகும்; கவர்னர் உரையின் சாரம் கண்டால் ஏழைகளின் கவலை விலகும். பாமரனும் மகிழ்கின்றான்; படித்தவரும் மகிழ்கின்றார். தொழிலதிபரும் மகிழ்கின்றார்; தொழிலாளியும் மகிழ்கின்றார். அரசு அலுவலர்களும் மகிழ்கின்றனர்; அலுவலர் அல்லாதவர்களும் மகிழ்கின்றனர். குழந்தைகள் முதல் முதியோர் வரை அனைவரும் மகிழ்கின்றனர். மொத்தத்தில் அனைவரும் மகிழ்ச்சியோடு வாழ வழி வகுக்கின்றது இந்த கவர்னர் உரை.